# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102057

1. District : மாவட்டம் Sivagangai PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 01/2020 Date: நாள் 13.02.202

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Sections பிரிவுகள்: 7(a)

   (iii) Act சட்டம்: Act 16 of 2018 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10.02.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.02.2020 Time : நேரம் 08.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - I Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RI office, Sakkottai, Karaikudi Taluk

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 70 Km North East

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Subbu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Murugan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 13.09.1974 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Labour (g) Address : முகவரி 1/129. Gandhi Street, Lakshmi Nagar, Illuppakudi, Karaikudi Taluk.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. Jeeva, Sakkottai Firka, Karaikudi Taluk

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 13.02.2020ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.சுப்பு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சாக்கோட்டை பிர்கா, வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு கமற்றும் கண்காணிப்புத்துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 13.02.2020ம் தேதி 09.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் மு.சுப்பு, த/பெ.முருகன், கதவு எண்.1/129, காந்தி வீதி, லெட்சுமி

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Subbu 13/02/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13.2.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் DSP / V & AC / SVG
Rank: நிலை ...................... No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.02.2020

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.01/2020 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி-

நகர், இலுப்பக்குடி, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது அம்மா பேச்சி, மகன ராமச்சந்திரன் மற்றும் மகள் வித்யாஸ்ரீ ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி கனிமொழி சில மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். எனது மகன் ராமச்சந்திரன் கல்லூரியில் இரண்டாம் ஆண்டும், எனது மகள் வித்யாஸ்ரீ எட்டாம் வகுப்பும் படித்து வருகிறார்கள். நான் சிறப வேலை, கோயில் கட்டுதல் ஆகிய வேலைகளை செய்து வருகிறேன். தற்போது நான் சொந்தமாக கல்லுப்பட்டறை வைப்பதற்கு வங்கியில் லோன் வாங்க உத்தேசித்துள்ளேன். வங்கிக்கடன் பெறுவதற்கு தேவையான வருமானச்சான்று பெறவேண்டி கடந்த 06.02.2020 அன்று காரைக்குடியில் உள்ள ஒரு இண்டர்நெட் சென்டரில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். எனது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- என விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளேன். விண்ணப்ப கட்டணமாக ரூ.60/- செலுத்தியுள்ளேன். எனது வருமான சான்று கோரிய விண்ணப்பத்தின் எண்.TN420200206496 ஆகும். 08.02.2020ம் தேதி தனது நண்பர திரு.அன்பரசு மூலம் இலுப்பக்குடி கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து தனது வருமானச்சான்று விண்ணப்பத்தை பற்றி கேட்க சொன்னதன் பேரில் அவர் அன்றைய தினமே, வி.ஏ.ஓ-வை சந்தித்து எனது விண்ணப்பத்தின் நிலையை பற்றி கேட்டுள்ளார். அதற்கு வி.ஏ.ஓ எனது நண்பர் அன்பரசுவிடம், எனது விண்ணப்பத்தை பரிசீலனை செய்து, வருமானச்சான்று வழங்க பரிந்துரை செய்து சாக்கோட்டை வருவாய் ஆய்வாளருக்கு Online-ல் அனுப்பி விட்டதாக தெரிவித்துள்ளார். எனவே, நான் 10.02.2020 அன்று சாக்கோட்டையில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்களிடம் எனது வருமான சான்று விண்ணப்பத்திற்கான இரசீதை காண்பித்து, வங்கியில் லோன் பெறுவதற்காக வருமானச்சான்று தேவைப்படுவதாக சொல்லி, எனது விண்ணப்பத்தின் நிலையை பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் உங்களுக்கு லோனுக்கு, எவ்வளவு வருமானமனு சர்டிபிகேட் வேணும் என கேட்டார். நான் அவரிடம் எனது விண்ணப்பத்தில் ரூ.72,000/- ஐ ஆண்டு வருமானமாக காண்பித்துள்ளதாக கூறினேன். அப்போது அவர் என்னிடம், "ரூ.72,000/- என வருமான சான்று கொடுக்க முடியாது, ரூ.96,000/- போட்டுத்தருகிறேன், வருமானச்சான்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுங்க" என்று கேட்டார். நான், அவரிடம் பணம் கொண்டு வரவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர்,

"ரெண்டு நாள்ல ஆயிரம் ரூபாயை கொண்டு வந்து கொடுங்க, காசு கொடுத்தால்தான் உங்க application-ஐ தாசில்தாருக்கு recommend பண்ணி அனுப்புவேன்" என்று சொன்னார். நான் காசை ரெடிபண்ணிட்டு வந்து பார்ப்பதாக அவரிடம் தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுத்து வருமானச்சான்று பெற விருப்பம் இல்லை. ஆகவே, எனக்கு வருமானச்சான்று வழங்க என்னிடம் ரூ.1000/- லஞ்சம் கேட்ட சாக்கோட்டை வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd.M.Subbu, 13/02/2020.

Sir, Received the complaint on 13.02.2020 at 08.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Sivagangai V&AC Cr.No.1/2020 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 13.02.2020 at 09.00 hrs. sd.I.Manimannan, DSP, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை நீதித்துறை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

13.2.20

DEPUTY SUPERINTENDENT OF POLICE
VIGILANCE & ANTI-CORRUPTION
SIVAGANGAI.